# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.11/2026 | Date | : 03.03.2036 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : ராஜேஸ்வரி | Calling | : |
| Husband Name | : முனியப்பன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.03.2036.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையத்தில் வசித்து பூ வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 03 மாதத்திற்கு முன்பாக, வைகுந்தம் சந்தைபேட்டையில் உள்ள பிள்ளையார் கோவில் முன்பு நான் பூ விற்பனை செய்வதற்காக சென்றிருந்தேன். அப்போது, மதியம் சுமார் 01.00 மணியளவில் நான் பூ கட்டிக்கொண்டிருந்தபோது, கார் ஒன்று வேறு பாதையில் செல்வதற்கு பதிலாக நான் அமர்ந்திருந்த பாதையில் ஆர்ன் ஏதும் அடிக்காமல் வந்து என் வலது காலின்மீது காரை ஏற்றிவிட்டார்.

2) நான் தலை குனிந்து பூ கட்டிக்கொண்டிருந்தேன். கார் வேகமாக வந்ததா என்று எனக்கு தெரியவில்லை. நான் சாலையின் வலதுபுறமாக விநாயகர் கோவில் அருகிலேயே அமர்ந்துகொண்டிருந்தேன். ஆஜர் எதிரி தான் மேற்படி காரை ஓட்டிவந்த நபர் ஆவார். பின்னர், அடிப்பட்டவுடன் என்னை அருகில்

இருந்தவர்கள் ஆட்டோவின் மூலம் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். பின்னர், என்மகள் என்னை மேல்சிகிச்சைக்காக திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனையில் சேர்த்தார். போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Rajeshwari

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.11/2026 | Date | : 03.03.2036 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : கலா | Calling | : |
| Husband Name | : ராஜா | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.03.2036.

<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இறையமங்கலத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். சுமார் 03 மாதத்திற்கு முன்பாக எனது அம்மா ராஜேஸ்வரி, வைகுந்தம் சந்தைபேட்டையில் உள்ள கோவிலில் நடந்த திருவிழாவில் பூ விற்பனை செய்வதற்காக சென்றபோது, கார் ஒன்று அவர்மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவரை சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பதாகவும், அருகில் இருந்தவர்கள் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள்.

2) உடனே, நான் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, எனது அம்மாவிற்கு வலது காலில் வீக்கம் ஏற்பட்டிருந்தது. மருத்துவர்களை கேட்டபோது எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாகவும், அவரை மேல்சிகிச்சைக்காக கொண்டு செல்லலாம் என்று கூறினார்கள். பின்னர், நான் எனது அம்மாவை

திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Kala

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.11/2026 | Date | : 03-03-2026 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : திரு.அருண்குமார் | Calling | : |
| Father/Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.03.2026.
<u>(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).</u>

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை** :</u>

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சேட்டு, அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 18-11-2025 ம் தேதி, 15.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக திரு.சேட்டு, அவர்கள் பணிபுரிந்தபோது, முன்னதாக சங்ககிரி அரசு மருத்துவமனை மற்றும் திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற ராஜேஸ்வரி, என்பவரின் RTA தகவலின்பேரில், திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ராஜேஸ்வரி, என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.499/2025,

சட்டப்பிரிவுகள் 281, 125(a) of BNS- ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையை, வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2) பின்னர், அன்றைய தினமே, மாலை சுமார் 04.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பெருமாள் மற்றும் பெரியபையன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றுள்ளார் (**பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி சோமசுந்தரம், த/பெ.தேவராஜ், என்பவர் TN 90 H 7435 என்ற பதிவு எண் கொண்ட Maruthi Hybrid Zeta காரை அஜாக்கிரதையாக ஓட்டிவந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து எதிரி சோமசுந்தரம், த/பெ.தேவராஜ், என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 21.11.2025 ஆம் தேதி, காலை சுமார் 11.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையம் முன்பு வைத்து எதிரியை கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

4) பின்னர், கடந்த 08-12-2025 ம் தேதி, இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய TN 90 H 7435 என்ற பதிவு எண் கொண்ட Maruthi Hybrid Zeta காரை

வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, பின்னர், வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை கடந்த 23-12-2025 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கையை பெற்றுள்ளார். ( **TN 90 H 7435 என்ற பதிவு எண் கொண்ட Maruthi Hybrid Zeta காரின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) பின்னர், அன்றைய தினமே, விபத்தில் காயமடைந்த ராஜேஸ்வரி, என்பவருக்கு சிகிச்சை அளித்த திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனை மருத்துவர் திரு.ரதீஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ராஜேஸ்வரி, என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். **(விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

6) பின்னர், ராஜேஸ்வரி, என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என மருத்துவர் காயச்சான்று வழங்கியதால் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 281, 125(a) of BNS-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 281, 125(b) of BNS- பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) of BNS- ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,

Sd/-Arunkumar

Judicial Magistrate No.1,

Sankari.